செய்தி வெளியீடு எண்:213 நாள்: 18.04.2017

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி K.பழனிசாமி** அவர்கள், சீர்காழி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு. பி.வி.பாரதி அவர்களின் மனைவி திருமதி மாலதி அவர்கள் இன்று (18.4.2017) உடல்நலக் குறைவால் காலமானதையடுத்து அனுப்பிய இரங்கல் கடிதத்தின் விவரம் பின்வருமாறு:–

---

“தங்களின் அன்பு மனைவி திருமதி மாலதி அவர்கள் இன்று (18.4.2017) உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மனவேதனையும் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தினால் ஈடுசெய்ய முடியாத இழப்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள போதிலும், இந்தத் துயரத்தை தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியையும், தைரியத்தையும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் அளிக்க வேண்டும் என்றும், திருமதி மாலதி அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

திருமதி மாலதி அவர்களை இழந்து வாடும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.’’

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**

**நாள் 18.4.2017**